பக்கங்கள் 4 விலை: ரூபா 2-00

University of Jaffna Sri Lanka RECEIVED 1989-10-31 Periodicals Division Library

# விடுதலை

இதழ்: 23 செவ்வாய்க்கிழமை 31-10-1989

## ஜீப்புக்கு கண்ணிவெடி 4 பொலீசார் மரணம்

தென்னிலங்கையிலுள்ள கண்ணெறுவ றம்பந் தோட்ட என்னுமிடத்தில் நிலக் கண்ணிவெடி மூலம் பொலீஸ் வாகனம் ஒன்றை தகர்த்துள்ளனர்.

இக்கண்ணி வெடிக்கு இலக்கான பொலீஸ் வாகனத்தில் பிரயாணம் செய்த 4 பொலீசார் ஸ்தலத்திலேயே இறந்துள்ளார்.

இக்கண்ணிவெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியைச் சுற்றிவளைத்த பாதுகாப்புப் படையினர் சந்தேகத்தின் பேரில் பலரை கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

# திருகோணமலையில் பல்கலைக்கழகம்

★ இதற்கான சட்ட மூலம் ஒன்றை மாகாண சபையில் முதலமைச்சர் சமர்ப்பிக்கவுள்ளார்

★ வடக்கு கிழக்கு மாகாண பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிறுவப்படும்

(திருமலை நிருபர்)

திருகோணமலையில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கையாக உயர்கல்வி தொடர்பான சட்டமூலம் ஒன்றை எதிர் வரும் 14ந்திகதி முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள்மாகாண சபையில் சமர்ப்பிக்கவுள்ளார். இதற்கான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பதாக பேரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சட்டமூலம் மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டதும் வடக்கு கிழக்கு மாகாண பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிறுவப்படும். இவ் ஆணைக்குழு, வடக்குக் கிழக்கில் பல்கலைக்கழக வளாகங்கள், பல்கலைக்கழக கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் நிறுவுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருக்கும். இதற்கான அடுத்தடுத்த சட்ட நடவடிக்கைகள் தீரிதகதியில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் முதலமைச்சரின் செயலகம் தெரிவித்தது.

### 7ம் திகதி மாநாடு

உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள் மாநாடு எதிர் வரும் 7ந் திகதி செவ்வாய்க்கிழமை திருமலையில் மாகாண உள்துறை அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் முதலமைச்சரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் உள்துறை அமைச்சின் பதில் செயலாளர் திரு. எஸ். பத்மநாதன், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. கே. பரமேஸ்வரன் ஆகியோர் உட்பட யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் கலந்து கொள்வார்கள்.

### 11ந் திகதி மாநாடு

வடக்கு கிழக்கு மாகாண புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழு மாநாடு எதிர்வரும் 11ந் திகதி சனிக்கிழமை முதலமைச்சர் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அரசாங்க அதிபர்களும், திணைக்களத் தலைவர்கள் மத்திய புனர்வாழ்வு ராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. கே. சி. லோகேஸ்வரன், தேசிய புனர்வாழ்வு நெறிப்படுத்

(4ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் தேர்தலில் நிற்க மறுப்பு

(டெல்லி)

வேட்பு மனுதாக்கல் செய்யும் கடைசி நாளான இன்று மாலை இறுதி நிமிடத்தில் தாம் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் அறிவித்தார். காங்கிரஸ்மேலிடம் அவருக்காக ஒதுக்கித்தந்த அந்த தொகுதியில் போட்டியிட மறுத்துவிட்டார்.

கடந்த 17 வருடங்களாக நைனிதால் தொகுதி உறுப்பினராகத் தொடர்ந்து இருப்பதால் இம்முறையும் அத்தொகுதியிலேயே போட்டியிட திரு பந்த விரும்பியதாகவும் ஆனால் பிரதமர் ராஜீவ் டில்லியில் ஏதாவதொரு தொகுதியில் போட்டியிடுமாறு கேட்டுக்கொண்டதாகவும், இதனால் ஏற்பட்ட மனக்கசப்பே அமைச்சர் பந்த் அவர்களின் இம்முடிவுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகும் உத்தேசம் எதுவும் இல்லை என்று கூறிய திரு. பந்த காங்கிரஸ் வெற்றிக்காக முன்னின்று உழைக்கப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் தேசிய படையின் அம்பாறை மாவட்டத் தளபதி 'காலித்' பிரதித் தளபதி கணேசமூர்த்தி

(அம்பாறை)

தமிழ் தேசிய படையின் அம்பாறை மாவட்டத் தளபதியாக திரு. காலித் நியமிக்கப்பட்டுள்ளார். இப் படையின் பிரதித் தளபதியாக திரு கணேசமூர்த்தி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்திய அமைதிப்படை விலகிக்கொண்ட அம்பாறை மாவட்டத்தில் அமைதி, ஒழுங்கை நிலைநாட்டுவது தமிழ் தேசிய படைத் தளபதியினதும், உதவித் தளபதியினதும் பொறுப்பாகும்.

## வடக்கு - கிழக்கு மாகாணசபையின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு விசேட வைபவங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஓராண்டு நிறைவு விழா டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு எட்டு தமிழ் மாவட்டங்களிலும் பல விசேட வைபவங்கள் இடம்பெறவுள்ளன.

மாகாணசபையின் தலைமை அலுவலகம் செயல்பட்டுவரும் திருகோணமலையில் கலாசார கண்காட்சி விழாவை நடாத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது.

## பள்ளத்தாக்கில் விழுந்து எரிந்த விமானம்.

(ஹவாய்)

சனிக்கிழமை இரவு காணாமல் போன அலோகாதீவு விமானத்தின் எரிந்துபோன சிதைவுப் பகுதிகள் ஹவாய் தீவில் கண்டெடுக்கப்பட்டன. 20 பயணிகளை ஏற்றிக் கொண்டு அலோசா தீவிலி

(4ம் பக்கம் பார்க்க)

## ஓடும் மினிபஸ்ஸில் திருடும் பெண் கொள்ளையர்கள்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் சேவையிலீடுபடும் மினிபஸ்களில் சாத்திரம் சொல்வதாக கூறும் பெண்கள் அதில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு இடைவழியில் இறங்கிவிடுகின்றனர்.

இவர்கள் இடைவழியில் ஏறி புட்போட்டில் அதிகமாக நிற்க விரும்புவார்கள். கண்டெக்டர் எங்கே என்று கேட்டால் இடையில் உள்ள ஒரு இடத்தைக் கூறுவார்கள்.

தமது காரியம் கைகூடியதும் ஐயோ ''இறங்க வேண்டிய இடம் போய்விட்டது, இங்கிட்டு இறக்கிவிடுங்கள்'' என்று இறங்கி விடுவார்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

## பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

மத்திய தொழில் நுட்பத் துறை அபிவிருத்தி நிலையம் க. பொ. த (சா/த) பரீட்சையில் சித்தி எய்திய இளைஞர்களிடமிருந்து தொழில்நுட்ப பயிற்சிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. பயிற்சிகாலத்தின் போது படியும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 15ந் திகதிக்கு முன்னதாக வெல்லம்பிட்டியிலுள்ள ஊறுகொடவத்தையில் இருக்கும் மத்திய தொழில் நுட்பத் துறை அபிவிருத்தி நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். விண்ணப்பிக்க வேண்டிய விபரங்களை அரசாங்க வர்த்தமானியில் பார்க்கலாம்.

## சொத்துக்கள் கையேற்பு

(திருமலை)

மாவட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தளபாடங்கள், கட்டிடங்கள், வாகனங்கள் ஆகியவற்றை குறிப்பிட்ட அரசாங்க அதிபர்களிடமிருந்து பெற்று, மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் அவ்வப் பிரதேச சபைகளிடம் உடனடியாகக் கையளிக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண உள்துறை அமைச்சு பணிப்புரை விடுத்திருப்பதாக உள்ளூராட்சி ஆணையாளர் திரு. கே. பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## கோட்டச் செயலாளர்களை முதல்வர் சந்திக்கவுள்ளார்

(திருகோணமலை)

கோட்டச் செயலாளர்கள் மாநாடு வடக்கு - கிழக்கு மாகாண முதல்வர் திரு. வரதராஜப் பெருமாள் தலைமையில் (நவம்பர்) அடுத்த மாதம் 2ந் திகதி நடைபெறும்.

உதவி அரசாங்க அதிபர்கள் புதிய அமைப்பின்படி 'கோட்டச்செயலாளர்கள்' என பதவிப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

உதவி அரசாங்க அதிபர்கள் கோட்டச்செயலாளர்களாக மாற்றப்பட்ட பின்பு முதலமைச்சர் அவர்களை இம் மாநாட்டில் சந்திக்கவுள்ளார். திருகோணமலையில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானக் குண்டுவீச்சுக்கு 19 பேர் பலி!

(ஆப்கானிஸ்தான்)

விமானக் குண்டுவீச்சுக்கு திருமணத்துக்குச் சென்ற 19பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலிலுள்ள விமானப் படைத்தளத்தின்மீது கொன்ருய் கிளர்ச்சிக்காரர்கள் மேற்கொண்ட தாக்குதலின் போதே திருமணக் கோஸ்டியில் சென்றுகொண்டிருந்த 19 பேர் மரணமடைந்தனர். துரதிஸ்டவசமாக திருமணத் தம்பதிகள் எவ்வித காயமுமின்றி இக்குண்டு வீச்சு சம்பவத்திலிருந்து தப்பிவிட்டனர்.

இறந்தவர்களில் 11 பெண்களும், 6 குழந்தைகளும், 2 ஆண்களும் அடங்குவர்.

இதே சமயம் சோவியத் - ஆப்கான் எல்லேயில் நடைபெற்ற மற்றுமொரு குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரு குண்டு வீச்சு ஜெற் விமானத்தை ஆப்கான் புரட்சிப் படையினர், விமான எதிர்ப்பு பீரங்கியிஞல் சுட்டு வீழ்த்தியதாக மெக்ருப்பிற்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஐ. நா. அதிகாரிகள் காதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கிருர்கள்

(விண்ஹோக்)

நமீபியாவிலுள்ள ஐ நா. அதிகாரிகள் அரசியலைவிட காதலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிருர்கள்.

அரசியல் தங்கள் காதலுக்கு குறுக்கே நிற்கக்கூடாதென்பதே தமது நிலைப்பாடென ஐ. நா. அதிகாரி ஒருவர் கூறிஞர்.

ஐ. நா. படையிலுள்ள நியூஸிலாந்து பொலிஸ் வீரர் ஒருவர் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரின் மகளைத் திருமணம் செய்திருப்பது இதற்கோர் உதாரணமாகும்.

நமீபியாவில் 7000 பேர்களைக் கொண்ட ஐ. நா. படை இருக்கிறது இந்தப் படையிலுள்ள திருமார்க்நாட்டார் என்பவர் நசீமாஸ்டு வீரட் என்ற பெண்ணை அண்மையில் திருமணம் செய்துள்ளார்.

## காளிமுத்து போட்டியிடுகிருர்

(சென்னை)

முன்னுள் அமைச்சர் கே. காளிமுத்து அ. தி. மு. க. சார்பில் சிவகாசி தொகுதியில் போட்டியிடுகிருர். மக்களவைத் தேர்தலில் அ. தி. மு. க சார்பில் போட்டியிடும் 11 வேட்பாளர்களின் பெயர்களையும் வெள்ளியன்று கட்சியின் பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதா அறிவித்தார்.

எம். ஜி. ஆர். ஆட்சியில்

(4ம் பக்கம் பார்க்க)

## சோவியத் படைகளின் படைப்பலம் குறைப்பு

(மாஸ்கோ)

சோவியத் படைகளின் படைப்பலத்தில் பெருமளவு குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இப்புதிய படைக் குறைப்பு திட்டத்தின் கீழ் படைகளில் ஆட்பலம் 1,68,500 பேரிஞல் குறைக்கப்படும் இராணுவம் கடற்படை ஆகியவற்றில் 6,680 டாங்கிகள், 1,070 தாக்குதல் அமைப்புக்கள், 509 இராணுவ ஆகாயவிமானங்கள், 12 நீர்மூழ்கிக் கப்பல்கள், 28 கப்பல்கள் என்பன குறைக்கப்படவுள்ளன.

இவ்வாண்டு முடிவதற்குள் 'வோர்ஸோ' ஒப்பந்த நாடுகளின் பிரதேசங்களிலிருந்து பலரக அணு ஆயுத அமைப்புக்கள் குறைக்கப்படுமெனவும் 'டாஸ்' தெரிவித்துள்ளது.

## பங்களாதேஷில் போதைவஸ்து ஜனதிபதி எர்சாத் தகவல்

(கோலாலம்பூர்)

பங்களாதேஸில் போதை வஸ்துக் கடத்தலும் விற்பனையும் அதிகரித்து வருவதாக பங்களாதேஷ் ஜனதிபதி ஜெனரல் எர்சாத்இங்கு தெரிவித்தார்

கோலாலம்பூரில் நடைபெறும் காமன்வெல்த் உச்சி மாநாட்டில் அவர் உரையாற்றிஞர்.

உலகில் போதை வஸ்து கடத்தலே தடுக்க உலக நாடுகள் தேசிய ரீதியாகவும்,உலக ரீதியாகவும் செயற்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்

## ஐ. நா. வின் அமைதிப்பணிக்கு அமெரிக்கா உதவி

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபை உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளும் அமைதிகாக்கும் நடவடிக்கைக்கு 65 லட்சம் அமெரிக்கா நிதியுதவியாக வழங்கியுள்ளது.

## மோட்டார் வாகனம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ், சுகாதார திணைக்களத்திற்கு 'யூனிசெப்' நிறுவனம் புதிய மோட்டர் வாகனமொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

தொற்றுநோய் தடுப்பு வேலைகளுக்கு இந்த வாகனம் பயன்படுத்தப்படுத்தப்பட்டு வருகிறது.

## கொலே, கற்பழிப்பு; இளம் குற்றவாளிகளுக்கு அமெரிக்காவில் மரண தண்டனே!

(வாஷிங்டன்)

கொலே, கற்பழிப்பு போன்ற கொடூரமான குற்றங்களில் ஈடுபடும் 16, 17 வயது இளம் குற்றவாளிகளுக்கும் மரண தண்டனே விதிக்கலாம் என அமெரிக்க சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அமெரிக்காவில் மீஸோரி, ஹென்டக்கி ஆகிய இடங்களில் நடைபெற்ற இரண்டு கொலே வழக்குகளில் 16, 17 வயதுக் குற்றவாளிகளுக்கு மரண தண்டனேயை உறுதிப்படுத்தி இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## கம்பியூட்டர் தயாரிப்பு; சிங்கை, இந்தியா ருஷ்யா ஒப்பந்தம்

(புதுடில்லி)

கம்பியூட்டர்கள் தயாரிப்பு தொடர்பான ஒப்பந்தம் ஒன்று இந்தியா, சிங்கப்பூர், ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளுக்கிடையில் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி கம்பியூட்டர்களுக்கு தேவையான முக்கிய பாகங்களே சிங்கப்பூர் இந்தியாவிற்கு வழங்கவுள்ளது. இந்தியா கம்பியூட்டர்களே உருவாக்கி ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யும்.

## 5லட்சம் பேருக்கு கருத்தடை

(சென்னை)

தமிழ் நாட்டில் இவ்வருடம் இரண்டு லட்சம் பேருக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு குடும்பநலத் திட்ட துறையினர் இவ்வருட முடிவுக்குள் சுமார் ஐந்து இலட்சம் பேருக்குக் கருத்தடை சிகிச்சை செய்யத் திட்டமிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிங்கப்பூரில் அமெரிக்கா இராணுவ தளம்; ஆட்சேபித்து இளேஞர்கள் மகஜர்!

(கோலாலம்பூர்)

"சிங்கப்பூரில் அமெரிக்க ராணுவதளம் அமைக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு கொடுப்பதானது இராணுவ நடவடிக்கைகளே இந்த வட்டாரத்தில் விறுவிறுப்படையச் செய்வதற்கு சோவியத் யூனியனுக்கு அழைப்பு விடுப்பது போலாகும்" என்று மலேசியா அம்னே இளேஞர் அமைப்பு கோலாலம்பூரில் இருக்கும் சிங்கப்பூர் தூதரகத்திடம் சமர்ப்பித்துள்ள ஆட்சேப மகஜரொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்னே இளேஞர் அமைப்பின் தலேவர் திரு. நஜ்ரி எழுதியுள்ள இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"சிங்கப்பூரும் மலேசியாவும் சகோதரத்துவ உறவு கொண்டிருக்கும் நாடுகள் இவ்விடயத்தில் சிங்கப்பூர் மலேசியாவின் உணர்வுகளே கருத்தில் கொள்ள மறுத்து விட்டது"

## ஐ. நா. வில் கியூபா

(ஜெனிவா)

நீண்டகாலமாக கியூபா ஐக்கிய நாடுகள் சபையில் சேர்வதை எதிர்த்து வந்த அமெரிக்க அரசு எதிர்ப்பைக் கைவிட்டதால் கியூபா புரட்சி வெற்றி பெற்று 30 வருடங்களுக்குப்பின் ஐ நா. பாதுகாப்புச் சபையில் தற்காலிக அங்கத்துவ நாடாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

## சிறுவர் சமாதான சபை

(லண்டன்)

உலகில் வாழும் சிறுவர்கள் மத்தியில் சமாதானத்தை வலியுறுத்தவும், மானிட ஐக்கியத்தையும் வளர்க்க உதவும் பொருட்டு லண்டனில் சர்வதேச சிறுவர் சமாதானசபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கவுன்ஸிலின் முதலாவது சர்வதேச மாநாடு கடந்த வருடம் மே மாதம் சுவிற்சலாந்தில் இருக்கும் லூகாஞே நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இச்சமாதானக்கவுன்ஸிலின் இரண்டாவது மாநாடு இவ்வருடம் டிசெம்பர் மாதம் 28-ம் திகதி முதல் 1990 ஜனவரி 4 ம் திகதிவரை பாண்டிச்சேரியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## புதிய முயற்சி

(லுசாக்கா)

நாட்டு வைத்தியத்தையும், ஆங்கில மருத்துவத்தையும் இணைத்து எயிட்ஸ் நோய்க்கு மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இந்த இரு வைத்தியத்துறைகளேயும் சேர்ந்த சுமார் ஐநூறு வைத்திய நிபுணர்கள் அண்மையில் லுசாக்காவில் கூடி இதுபற்றி ஆராய்ந்தனர்.

## சீஞவில் பெண் வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கிறது.

(பீஜிங்)

சீஞவில் பெண்களே விற்பனே செய்து பணம் சம்பாதிக்கும் வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

50 யுவான் தொடக்கம் 5000 யுவான் வரை பெண்களின் விலே அதிகரித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

கூடிய இலாபமீட்டக்கூடிய இத் தொழிலில் சுமார் ஆயிரம் வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

"நாங்கள் பிஜிங்கிற்கு தெற்கே உள்ள ரெயில் நிலேயம் ஒன்றுக்கு அருகே இருந்தோம். அப்போது 7 பேர் எனது மகளேயும் சொந்தக்காரப் பெண்ணேயும் ரிக்ஷாவில் கடத்திச் சென்று விட்டார்கள்" என்று 47 வயதான தந்தை ஒருவர் சீனப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளே இங்குள்ள 10 மாகாணங்களில் மலிவாக வாங்கப்பட்ட சுமார் ஐயாயிரம் பெண்கள் பிஜிங்கிற்கு தெற்கேயுள்ள ஹுபெய் மாநில நகர்ப்பகுதியில் விவசாயிகளுக்கு பெரும் பணத்திற்கு விற்கப்பட்டுள்ளார்கள் என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## ஏர்-இந்தியா 6 விமானங்களே புதிதாக வாங்கும்

(சென்னை)

ஏர்-இந்திய நிறுவனம் மேலும் ஆறு புதிய விமானங்களே கொள்வனவு செய்து சேவையிலீடுபடுத்தவுள்ளது இவற்றில் இரண்டு ஏர்பஸ்களாகும்

இதேவேளே ஏர்-இந்தியா நிறுவனத்தின் புதிய சின்னமாக 'சூரியன்' அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## படகு மூழ்கியது

(ரங்கூன்)

பர்மாவில் 170 பயணிகளே ஏற்றிச்சென்ற இரண்டு அடுக்குப் படகு ஒன்று தலைநகர் ரங்கூனுக்குத் தென்மேற்கே சுழலில் சிக்கி மூழ்கி விட்டதாக ரங்கூன் வாஞெலி அறிவித்தது. 62 பயணிகள் காணமல் போய்விட்டதாக அஞ்சப்படுகிறது.104 பயணிகள் மீட்கப்பட்டனர். நான்கு சடலங்களும் மீட்கப்பட்டது.

## யப்பானியகப்பல்களில் ஆசிய நாட்டவர்பணிபுரிய அனுமதி

(டோக்கியோ)

யப்பானிய தேசிய கொடிகளேக்கொண்டுள்ள கப்பல்களில் இனிமேல் ஆசிய நாட்டவர்களும் பணிபுரிய அனுமதிக்கப்படுவர்.

தற்பொழுது இத்தகைய கப்பல்களில் யப்பானியர்கள் மட்டுமே பணிபுரிய அனுமதிக்கப்பட்டு வருகின்ருர்கள்,

எழுபதிஞயிரம் உறுப்பினர்களேக் கொண்டுள்ள யப்பானிய மாலுமிகள் சங்கத்தின் கோரிக்கையையடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இத்தகைய கப்பல்களில் ஆகக்குறைந்தது ஒன்பது மாலுமிகளாவது கடமைபுரிதல் வேண்டுமெனவும் பணிக்கப்பட்டுள்ளது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ இரு நாட்கள், யாழ். 'இந்து'வில் நடைபெற்ற

# ஈழத்துநூல், சஞ்சிகை, ஓவியசிற்பகண்காட்சி

யாழ். உள்ளூராட்சித் திணைக்களம், யாழ். ரோட்டரிக் கழகம், யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் போன்ற மூன்று ஸ்தாபனங்கள் இணைந்து நடத்திய ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவிய சிற்பக் கண்காட்சி அக்டோபர் 28, 29ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியில் பிரதமவிருந்தினராக யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், 'ஈழநாடு' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான திரு. என். சபாரத்தினம் கலந்துகொண்டார்,

கண்காட்சியின் சிறப்பு நிகழ்ச்சியாக 'எழுத்தாளர் கலைஞர் ஒன்றுகூடல், ஈழத்து இலக்கிய வளர்ச்சி எதிர்நோக்கும் பிரச்னைகள்'' ஈழத்தின் கலைவளர்ச்சி ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிகளில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் வி. சிவசாமி, கலாநிதி சோ. கிருஷ்ணராசா, கலாநிதி சி. மௌனகுரு, கலாநிதி இ. பாலசுந்தரம், புலவர் ஈழத்துச் சிவானந்தன், டொமினிக் ஜீவா நெல்லை க. பேரன், சோ. தேவராஜன், குழந்தை ம. சண்முகலிங்கம். சாரல் நாடன், அந்தனி ஜீவா, அ. மாற்கு இ சிவானந்தன், செம்பியன்செல்வன், கலாநிதி சபா ஜெயராஜா, இ. முருகையன், தெணியான், கலாநிதி நா சுப்பிரமணிய ஐயர் கலாநிதி எஸ். ஜெயநேசன் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்

ஈழத்திலேஎழுத்தாளர்களின் தொகை அண்மைக்காலமாக அதிகரித்து வந்துள்ள போதிலும் அவர்கள் எழுதுவதை புத்தக வடியில் கொண்டு வருவதற்கு இயலாத நிலையிலுள்ளனர். புத்தக வடிவில் கொண்டு வந்தாலும் அவற்றிலே தமது பணத்தை செலவு செய்து நட்டமடைந்தவர்களைத்தான் ஈழத்து இலக்கிய உலகிலே சந்திக்கலாம்.

ஒரு புத்தக கண்காட்சியாக இது நடத்தப்பட்டிருந்தால் வெகு சிறப்பாக அமைந்திருக்கும். சிற்பம், ஓவியம், புகைப்படம் என்று சொல்லி ஏற்கனவே பார்த்த படைப்புக்களை கண்காட்சிக்கு வைத்தமை ரசிகர்களுக்கு அலுப்பைக் கொடுத்தது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற சதீஸ் அவர்களின் ஓவியகண்காட்சியில் வைக்கப்பட்ட ஓவியங்கள், சிற்பங்கள், வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற சனாதனின் ஓவியக்கண்காட்சி ஓவியங்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது.

### புத்தக கண்காட்சி

ஈழத்து படைப்புக்களைக் கொண்ட ஒரு கண்காட்சி என்ற முன்னறிவிப்பு இருந்த போதும் ஈழத்தவரின் பல சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறப்பு மலர்கள் இடம்பெறாமலிருந்தது வருத்தப்படவேண்டியதாகும்.

ஈழத்து இலக்கியப் பரப்பில், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விடுதலை இயக்கங்களுக்கும் பெருமளவு பங்கு இருந்தது என்பதனை இந்தக் கண்காட்சி அமைப்பாளர்கள் மறந்து விட்டார்கள் போலும் அதனால் இயக்கங்களினால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள் என்பனவற்றிற்கு இங்கு மறைப்பு போடப்பட்டிருந்தது.

'களத்தில்' என்றொரு பத்திரிகை பார்வைக்கு வைக்கப்பட்டதுபோல், தர்க்கீகம், கண்ணோட்டம், புதியபாதை, ஈழம், விடியல், பொதுமை, செந்தளம், புதிய கண்ணோட்டம், கனல், ஈழகேசரி, செந்தணல், சுதந்திரன், செய்திக்கதிர், ஈழமுரசு, ஈழநாடு, உதயன், முரசொலி போன்றவருக்கு பல ஈழத்துப் படையல்களைக் காணவில்லை.

இதுபோன்று சனசமூக நிலையங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் உட்பட பல பொது அமைப்புக்களால் வெளியிடப்பட்ட சிறப்பு மலர்களையும் இடம் பெறச் செய்திருக்கலாம் அவைகளையும் காணவில்லை

ஈழத்தமிழர் போராட்டம் தொடர்பாக குரும்பசிட்டி கனகரத்தினம் என்பவரால் தொகுக்கப்பட்டிருந்த பத்திரிகை குறிப்புகள் பாராட்டப்பட வேண்டியவையாகும்.

**ஒரு பார்வை**

கிழக்கு, மலையக எழுத்தாளர், கலைஞர் ஆக்கங்களைத் தேடிக்கண்டு பிடித்து கண்காட்சிக்கு வைக்கவேண்டிய கடமையிலிருந்து கண்காட்சியை ஒழுங்குபடுத்தியவர்கள் தவறியுள்ளனர் எனலாம்.

நமது தமிழ்ப்பிரதேசத்தின் பொருளாதாரம் சம்பந்தப்பட்டவைகள் காட்சியில் இடம்பெறவில்லை. உதாரணமாக; பனம் பொருட் விருத்தி தொடர்பான எத்தனையோ நூல்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள் உள்ளன. அவை கண்காட்சியில் இடம் பெறவில்லை.

'கண்காட்சிக்குத் தந்துதவுங்கள்' என்று விளம்பரம் செய்துவிட்டு ஏனோ தானோ என்றிருந்தால் அது கண்காட்சி ஒன்றினை நடாத்துகின்ற அடிப்படை நோக்கத்துக்கே முரண்பாடானதாகும். மூன்று பெரிய நிறுவனங்கள் இக்கண்காட்சியை ஒழுங்குபடுத்தி இருந்தும் முழுமையாக நடாத்த முடியாமல் போனது ஏன்?

கண்காட்சியில் வைப்பதற்கென கொண்டுவரப்பட்ட சில நூல்களை 'ஒழுங்காளர்கள்' வைப்பதற்கு விரும்பாமல் இருந்ததாகப் பேசப்படுகிறது. இது உண்மையா?

தமிழ் பேசுவோரின் நலன்களுக்காகவே கண்காட்சி ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளதாக நம்பப்பட்டாலும், இக்கண்காட்சி சிலரின் நலன்களுக்காக மட்டுமே நடாத்தப்பட்டது என சந்தேகிப்பது சரியாகுமா?

இவை உண்மையாயின் வருங்காலத்தில் இத்தவறுகள் திருத்தப்பட்டாலே 'கண்காட்சிகள்' நல்ல பலனைத் தரும்.

-சிந்தியா

---

## தென்னிலங்கையில் பல பகுதிகளில்
# சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பில் பாதுகாப்புப் படையினர் நடாத்திய தேடுதல் வேட்டையின்போது 20 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கிருலப்பனையிலும், மாநில வையிலும் பாதுகாப்புப் படையினர் நடாத்திய தேடுதலின் போது இந்த இருபது சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கொஸ்பாவ வடக்கு கிராம சேவகர் அலுவலகத்தின் ஆவணங்கள் தீவைக்கப்பட்டது, பராக்கிரம மாவத்தையில் ஆயுத பாணிகளான 15 நபர்கள் இலக்கத்தகடு பொருத்தப்படாத ஒரு காரில் வந்து எஸ். யே. கே. இலங்கரத்தின என்பவரை கடத்திச் சென்றனர்.

மாகம்மான வித்தியாலயத்தின் மலசல கூடத்திலிருந்து 143 தேசிய அடையாள அட்டைகள் பாதுகாப்புப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டன. கடத்தல்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட லிபரல் கட்சியின் மாகாண சபை தேர்தல் வேட்பாளர் திரு. ஒலிவர் காரியவசம் சடலம் கம்பகாவில் பொலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

கோலே பலலத்கமவில் துப்பாக்கிகள், சன்னங்கள், இராணுவ சீருடைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டதோடு, 9 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கிதாடம்பேயிலுள்ள கிராமிய வங்கியும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

---

# ஒன்றுபடுத்துங்கள்!

(கொழும்பு)

சகல தமிழ் குழுக்களையும் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றச் செய்யுங்கள், என ஜனாதிபதி பிரேமதாசாவிடம் திரு. தருமலிங்கம் சித்தார்த்தன் வேண்டியுள்ளார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணித் தலைவரான திரு. சித்தார்த்தன் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு விடுத்த வேண்டுகோளில், புலிஇயக்கம் உட்பட சகல தமிழ் அரசியல் குழுக்களையும் ஒரே மேசைக்கு அழைத்து அவர்களுக்குள் சமாதானத்தை ஏற்படுத்த வழி செய்யுங்கள் எனக் கோரியுள்ளார்.

---

## யாழ் நகரில் நுளம்புத்தொல்லை
# தினமும் அதிகரிக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நுளம்புத் தொல்லையின் தொல்லை வர வர அதிகரித்துக் கொண்டே போகிறது. நாட்டு நிலைமை தற்போது சீராக இருந்தும் சம்பந்தப்பட்டவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுப்பதில்லை எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் மலேரியா காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் அதிகமாக ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

மலேரியா தடுப்பு இயக்கம் என சுகாதாரப் பகுதியில் தனிப்பிரிவு ஒன்று இருந்தும் கடந்த பல காலமாக அதன் வேலைகளைச் செய்யாததினாலேயே நுளம்புகள் பெருகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

# படையினருக்கு எதிராக முறைப்பாடு செய்யலாம்

(கொழும்பு)

படையினரால் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுமானால் அதுபற்றி தம்மிடமோ அல்லது இராணுவ ஒழுக்காற்றுப் பாணிப்பாளரிடமோ எழுத்து மூலம் அறிவிக்குமாறு இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா பொது மக்களைக் கேட்டுள்ளார்.

முறைப்பாடுகளை அருகில் உள்ள இராணுவ முகாம்களிலும் சமர்ப்பிக்கலாம் என்றும் இதற்கான ஏற்பாடுகள் சகல முகாம்களிலும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

# 1200 பேருக்கு எயிட்ஸ் இரத்தப் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இதுவரை 1200 பேர் எயிட்ஸ் நோய் இரத்தப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோய் இரத்தப் பரிசோதனை மத்திய நிலையங்கள் தற்பொழுது கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இயங்கி வருகின்றன.

இதே வேளை 1990ஆம் ஆண்டளவில் உலகில் பத்து இலட்சியத்திற்கும் மேலான எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பார்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

---

# அங்கொட ஆஸ்பத்திரியில் நோயாளிகள் திடீர் மறைவு!

(கொழும்பு)

அங்கொட மனநோயாளர் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளில் பலர் அங்கிருந்து காணாமல் போய்விட்டதாக புகார்கள் வந்துள்ளன.

சில நாட்களுக்கு முன்னர் மத்துகமையில் இருந்து கொண்டுவந்து இங்கு சேர்க்கப்பட்ட மன நோயாளி ஒருவருக்கு என்ன நடந்தது எனத் தெரியவில்லை என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தார் எனவும், இதேபோல வேறு சிலரும் காணாமல் போனதாகவும் கூறப்படுகிறது.

நோயாளர்கள் காணாமல் போகும் சம்பவங்கள் உறவினருக்கும் பல நாட்களின் பின்பஅறிவிக்கப்படுகிறதாம்

---

# உல்லாசப் பயணத்துறையை
## வழமைக்குகொண்டுவர அரசு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் உல்லாசப்பயணத்துறையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுவருவதால் அதனை வழமையான நிலைக்கு கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிராக நடாத்தப்படும் பொய்ப்பிரசாரங்களாலேயே உல்லாசப் பயணிகளின் வரவு வெகுவாக குறைந்துள்ளது என உல்லாசப்பயணத்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் முதற் கட்டமாக வட அமெரிக்காவில் இலங்கை பற்றிய பிரச்சாரம் நடாத்தப்படவுள்ளது. எயர்லங்கா, தேயிலைச்சபை, உல்லாசப் பயணச்சபை ஆகியன இந்தப் பிரசாரத்தை நடாத்தவுள்ளன.

1983க்கு பின்னர் இலங்கையில் இனப்பிரச்னை காரணமாக உல்லாசப்பயணத்துறை வீழ்ச்சியடைந்து வந்தது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் 1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தையடுத்து சிறிது வழமைக்கு வந்த உல்லாசப்பயணத்துறை ஜே வி. பியின் வன்முறைகளால் மீண்டும் வீழ்ச்சியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை

# உண்மைக்கு விடுதலை வேண்டும்

இங்கே உண்மை சிறை வைக்கப்பட்டிருக்கிறது. பல் வேறு காரணங்களுக்காக மக்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள முடியாதவாறு தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருக் கிறார்கள். இதற்காக மக்களின் பய உணர்வு நன்கு பயன் படுத்தப்பட்டு விடுகிறது. இதனால் உண்மையைப் பேசுவது மட்டுமல்ல, உண்மையைத் தெரிந்து கொள்வது கூட அச்சத் துக்குரியதாகிவிட்டது.

எந்த ஒரு நாட்டின் விடுதலை இயக்கங்களுக்கும் கிடைக்காத வசதியாக, போராட்டம் ஆரம்பித்த குறுகிய காலத்துக்குள் ளேயே எமது நாட்டுக்குள் எமது இளைஞர் கையில் அதி நவீன ரக ஆயுதங்களெல்லாம் வந்து குவிந்து விட்டன. ஆரம்பத்தில் இவ் ஆயுதங்கள் அனைத்தும் பொது எதிரிக்கெதிராகவும், எமது மக்களின் விடுதலைக்காகவும் பயன்படுத்தப்பட்டதில் மக்கள் பெருமிதம் கொண்டிருந்தார்கள் ஆனால் அதுவே பின்பு எமக்குள் மோதிக்கொள்ளவும், மக்களின் வாயை அடைக்கவும், பயமுறுத்தி இயக்கங்களின் அதிகாரத்தை நிலை நாட்டிக் கொள்ளவும் என மாறிவிட்டது வேதனைக்குரிய நிகழ்வுகளாகும்.

உண்மை மறைக்கப்படுவது அல்லது திரிக்கப்படுவதுர ஒன்று பயந்தநிலைமையில் நடக்கிறது அல்லது திட்டமிட்ட கா, ணங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது.

அமைதியான சூழ்நிலையைக் குழப்பவும், ஜனநாயகத் தைப் புதைத்துவிடவும் பொய்யாகப் பல வதந்திகள் பரப்பப் படுகின்றன வன்முறைக் கொடூரங்கள் வளர்த்துவிடப்படு கின்றன. மறுபுறத்தில், வரலாற்றின் சில பகுதிகளை மறைத்துவிடுவதும், உண்மையை மக்களிடம் செல்லவிடாமல் ஒளிப்பதும், மழுப்புவதும், திரிப்பதுமாக மக்கள் வாய்மூடி, கண்மூடி, காதைப் பொத்திக்கொண்டு வாழவேண்டுமென்று நேரடியாகவும் மறைமுகமாகவும் அடக்கப்படுகிறார்கள்.

ஆயுத முனையிலான எரிப்புகளுக்கும், நிகழ்ச்சிகள் விழாக்களை ஒழுங்குசெய்பவர்களின் திட்டமிட்ட வரலாற்றுத் திரிப்புகளுக்கும் அந்தரங்கத்தில் தொடர்பிருப்பதை தெரிந்து கொள்ளமுடியும்.

உண்மையைக் கண்டு பயப்படுபவர்களும், அதை மறைக்க முற்படுபவர்களும் எப்போதுமே மக்களை ஏமாற்றிக்கொண்டிருக் கலாமென நினைத்துவிட முடியாது, சகலவிதமான கருத்துக் களுக்கும் சுதந்திரமளித்து சரியான கருத்தை நிலைநாட்டிக் கொள்வதே உண்மையான ஜனநாயகமாகும்

# யாழ் நகரில் மதுக்கடைகளை புதிதாகத் திறக்கவேண்டாம்

(யாழ்ப்பாணம்)

நகரில் மதுவிற்பனை நிலையங்கள் அதிகரித்து விட்டன. இனிமேல் இந்நிலையங்களைப் புதிதாக ஆரம்பிக்க அனுமதிக்க வேண்டாம்.

இவ்வாறு, யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை சனசமூக நிலையம் யாழ்மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

யாழ்மாநகரத்துள் மதுபானக்கடைகளுக்கு அனுமதி வழங்கி, வரியும் அறவிடப்படுவதால் மதுபானக் கடைகளைத் திறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது. இது மட்டுமல்ல சட்டவிரோத மதுபானக் கடைகளும் அதிகரித்து வருகிறது.

இதனால் பாதிக்கப்படுவது நமது மக்களும் நகரமுமேயாகும். எனவே புதிய மதுபானக் கடைகளைத் திறக்க எவருக்கும் அனுமதி வழங்காதீர்கள்.

அடைக்கல அன்னை சனசமூக நிலைய மக்களின் வழிபாட்டுத் தலமான அன்னை ஆலயத்தில் இரவுவழிபாடுகள் நடைபெறுவதற்கு மின்விளக்குகள் இல்லை. இதனைப் பொருத்தித் தருமாறும் வேண்டுகிறோம் என இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோட்டச் செயலாளர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டச் செயலாளர்களும் கலந்துகொள்வார்கள்

இம் மாநாட்டில், ஒவ்வோர் கோட்டப்பிரிவிலும் செய்யப்படவேண்டிய அபிவிருத்திகளையிட்டும் புனர்வாழ்வு நடவடிக்கைகளையிட்டும், பாதுகாப்பு நடவடிக்கைகளையிட்டும் ஆராயப்பட்டு உறுதியான முடிவுகள் எடுக்கப்படும்.

இம் மாநாட்டிற்கு வடக்கு, கிழக்கில் உள்ள சகல திணைக்களங்களினதும் பணிப்பாளர்கள், தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம் மாநாடு நடாத்துவது தொடர்பான சகல வேலைகளையும் பூர்த்தியாக்கிவிட்டதாக முதலமைச்சர் காரியாலயம் தெரிவிக்கின்றது.

வடக்கு கிழக்கில் நடைபெறும் இந்த மாநாடுபோல நாட்டில் உள்ள ஏழு மாகாணங்களிலும் முதல்வர்களால் மாநாடுகள் நடாத்தப்படவுள்ளன.

## காளிமுத்து

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சராக இருந்த திரு. காளிமுத்து, எம். ஜி ஆர். மறைவுக்குப்பின் கட்சி இரண்டாக உடைந்தபோது, ஜானகி அணியிலிருந்து கொண்டு ஜெயலலிதாவை மிகக் கடுமையாகத் தாக்கி வந்தவர். கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தபின் தற்போது ஜெயலலிதா தலைமையிலான அ. தி மு க. வில் சேர்ந்து போட்டியிடுகின்றார்.

# வடக்கு கிழக்கில் ஒருங்கிணைந்த நிவாரண உதவித்திட்டம்

(திருமலை)

வன்செயல்களால் இடம் பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த வசிப்பிடங்களிலோ அல்லது வேறு வசதியான இடங்களிலோ குடியமர்த்துவதற்கு வடக்கு கிழக்கு மாகாண அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்,

மாகாண புனர்வாழ்வு அமைச்சு மேற்கொண்ட துரிதநடவடிக்கையின் காரணமாக இதுவரைசுமார்30,8000 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட முதலமைச்சர், கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 28 000 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்,

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 241 . 53 மில்லியன் ரூபா பெறுமதியான உலர் உணவுகளை மாகாண புனர்வாழ்வு அமைச்சு வழங்கியிருப்பதுடன் கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 41. 97 மில்லியன் ரூபா பெறுமதியான உலர் உணவு வழங்கப்பட்டதாகவும் கூறினர்

# தேசிய சேமிப்பு சான்றிதழ் திட்டம் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் வங்கிகளில் நேற்று 'தேசிய சேமிப்புச் சான்றிதழ் திட்டம்' அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஜனசக்தி திடடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் நன்மை கருதியே இந்த தேசிய சேமிப்புச் சான்றிதழ் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மக்கள் வங்கி உதவி பொது முகாமையாளர் திரு எஸ். பி. ஆனந்தன் இவ்வைபவத்தில் கலந்து கொள்வதற்கு கொழும்பிலிருந்து வந்திருந்தார்.

பிரதம விருந்தினராகயாழ் அரச அதிபர் திரு. எஸ் தர்மபாலன் கலந்து கொண்டார்.

யாழ்நகரில் உள்ள பிரதான வீதி, ஸ்ரான்லிவீதி, கன்னாதிட்டி, நவீனசந்தை ஆகிய மக்கள் வங்கி கிளைகளில் இத்திட்டம் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

## ஸ்பெயினில் ஆளும்கட்சி வென்றது

(மாட்ரீட்)

ஸ்பெயினில் நடந்தபொதுத் தேர்தலில் பிரமதர் திரு. ஃபெலிப் கொன்சாலஸ் அவர்களின் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுள்ளது. 350 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் சோஷலிஸ்ட் கட்சிக்கு 176 இடங்கள் கிடைத்து பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது.

தேர்தல் முடிவுகள் நேற்றுக் காலையில் வெளியாகின 1982ல் முதல் தடவையாகச பதவிக்கு வந்த சோஷலிச கட்சிக்கு இது மூன்ருவது வெற்றியாகும். சென்றதேர்தலில் இக்கட்சிக்கு 184 இடங்கள் கிடைத்தது

## பள்ளத்தாக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து மொலோகா நோக்கிப் புறப்பட்ட விமானம் காணாமல் போய்விட்டதாக முன்னர் அறிவிக்கப் பட்டது தெரிந்ததே

## திருகோணமலை

1ம் பக்கத் தொடர்ச்சி)

தல் குழுவின் பொருளாதார வாய்ப்புத்துறை ஆலோசகர் திரு. கே. தயாபரன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்

## ஓடும் மினி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பெண்கள் தம்முடன் சிறுவர் சிறுமிகளையும் கூட்டி வந்து எடுத்தவற்றை அவர்களிடம் கொடுத்தும் கடத்தி வருகின்றனர்

பொதுமக்கள் இவர்கள் மீது அவதானமாக இருக்குமாறு பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

சில மினிபஸ்களில் இவர்கள் இவ்வாறு செய்யும்போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், இல. 6, மகாத்மா காந்தி வீதி நவயுக வெளியீட்டு நிறுவனத்தாரால் மேற்படி முகவரியில் உள்ள விடுதலை அச்சகத்தில் அச்சிடப்பட்டு 31 10-1989ல் வெளியிடப்பட்டது

தொலைபேசி 291

# பாகிஸ்தான், மே. இந்தியதீவு இறுதி ஆட்டத்துக்குத் தகுதி

(டெல்லி)

நேரு கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் இறுதி ஆட்டத்தில் விளையாட மேற் கிந்தியத் தீவுகள் அணியும் பாகிஸ்தான் அணியும் தகுதி பெற்றுள்ளன.

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணியை மே. இ. தீவுகள் அணியும், இங்கிலாந்து அணியை பாகிஸ்தான் அணியும் வென்றன.

இறுதிப் போட்டி புதன் கிழமையன்று நடைபெறவுள்ளது

## சுப்பர் சொல்கிறார்

யாழ்ப்பாண இராச்சியத்தை 1478ல் அரசாட்சி செய்தவன் பரராசசேகரன்.

இவனுக்கு சிங்கவாகு, பண்டாரம், பரநிருபசிங்கம், சங்கிலி என்று நான்கு மைந்தர்கள்.

இவர்களிலே 'சங்கிலி' மிகவும் துஷ்டகுணம் உள்ளவன் கபடன். மற்ற தனது சகோதரர்களுக்கு அரசாட்சி போய்விடக்கூடாது என்ற எண்ணம் கொண்டவன்.

இதனால் இவன் தனதுமூத்த சகோதரன் சிங்கவாகுவுக்கு உணவிலே நஞ்சு கொடுத்து கொன்றான் இரண்டாவது சகோதரன் பண்டாரம் என்பவன் பூஞ்சோலையில் உலாவிக்கொண்டிருக்கும் வேளையில் ஒளிந்து நின்று வாளால் வெட்டிக்கொன்றான்.

முடியையும், செங்கோலையும் பெற்றுவிடவேண்டும் என்பதால் சங்கிலி தனது மூன்றாவது சகோதரன் பரநிருபசிங்கனுக்கு இருந்த அரசாட்சி வாரிசு உரிமைச் சொத்துக்களையும் படிப்படியாகப் பறித்து வந்தான்.

இப்படி எல்லாம் சூட்சி மேல் சூட்சிகளைச் செய்து யாழ்ப்பாணத்தை அவனால் அரசாட்சி செய்யமுடிந்ததா? இல்லை.

சங்கிலியின் நடவடிக்கைகளால் வெறுப்புற்ற அனைவரும் ஒன்றுபட்டு நின்றனர். போத்துக்கீசர் சங்கிலியை முறியடித்து இராச்சியத்தைக் கைப்பற்றினர்.

தமிழன், குறிப்பாக ஈழத் தமிழன் அப்போதும் குளறு

# வரலாறு கற்றுத் தருவதென்ன?

இந்தக் கொலைகளைக் கண்ட மூன்றாவது சகோதரனான பரநிருபசிங்கன் தன்னையும் சங்கிலி கொன்று போடுவான் என்று பயந்து பேசாமல் இருந்தான்.

எனவே சங்கிலி தன்னைத் தானே 'அரசன்' என்று அறிவித்தான் ஆனால் மணிமுடியோ செங்கோலோ அவனிடமில்லை. புதிய மணிமுடியைசெய்துசூடிக் கொள்ள எண்ணினான். மக்கள் கலகம் செய்வார்கள் என்று பயந்து முடி இல்லாமலே அரசனாக இருந்தான்

முடியும் செங்கோலும் சங்கிலியின் தந்தையாகிய பரராசசேகரமகாராசாவிடமே இருந்தது. அவர் அதனை ஒழித்து வைத்திருந்தார். முறையில்லாத துட்டன் ஒருவனிடம் அதாவது சங்கிலியிடம் அதனைக் கொடுக்க அவர் விரும்பவில்லை. படிஉள்ளவன்தான் ஒற்றுமை என்பது இவன் அகராதியில் இல்லை. இதனால் நட்டம் மக்களுக்கே!

தனது சொந்த நலனுக்காக எதையும் செய்வான். எவ்வளவுகொலைகளையும் செய்யத் தயங்கான். இதனால் 'இவன்' தனது வரலாற்றில் கண்ட லாபம் என்ன? மக்களுக்குத் துன்பத்தை விளைவித்ததைத் தவிர வேறெதைச் சாதித் தான்?

சங்கிலிகள் நமக்கு வேண்டாம் எமக்குத் தேவையானதைச் சொல்வதற்கு எங்கள் வாய்ப்பூட்டுகளை உடைப்போம்.

தொடர்ந்தும் நீங்கள் ஊமையாக கொடுமைக்குப் பயந்து இருக்கப்போகிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org